

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | டிசம்பர் 20, 2018 | புரட்சி 17 | முழக்கம் 49 | விலை: ரூ.3.00

### 160க்கும் மேற்பட்ட அமைப்புகள் பங்கேற்கின்றன

# கருஞ்சட்டைப் பேரணிக்கு திருச்சி நோக்கி திரளுகிறார்கள்

திருச்சியில் பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு சார்பில் டிசம்பர் 23 அன்று நடைபெறவுள்ள பெரியார் நினைவு கருஞ்சட்டைப் பேரணி மற்றும் தமிழின உரிமை மீட்பு மாநாட்டிற்கு அழைப்பு விடுக்கும் பத்திரிக்கையாளர் சந்திப்பு 17.12.2018 அன்று சென்னையில் நடைபெற்றது.

இந்த பேரணி மற்றும் மாநாட்டில் இது வரையில் 160க்கும் மேற்பட்ட அமைப்புகள் இணைந்திருக்கின்றன. தமிழ்நாடு முழுதும் உள்ள பெரியார் கொள்கைகளை ஏற்கும் அனைத்து அமைப்புகளும், படைப்பாளி களும், செயல்பாட்டாளர்களும், தமிழின உணர்வாளர்களும் கருப்புச் சட்டை அணிந்து இந்த பேரணியில் பங்கேற்கிறார்கள்.

19.12.2018 அன்று அனைத்து அமைப்பு களின் பெயர்களையும் உள்ளடக்கிய முழுமையான பட்டியல் வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

பொதுமக்களும், பெண்களும், மாணவர் களும், இளைஞர்களும் பெருமளவில் திரண்டு பேரணி மற்றும் மாநாட்டில் பங்கேற்க வேண்டுமென அழைப்பு விடுக்கப்பட்டது.

இந்த பத்திரிக்கையாளர் சந்திப்பில், தமிழக மக்கள் முன்னணியின் ஒருங்கிணைப்பாளர் பொழிலன், விடுதலை தமிழ்ப்புலிகள் கட்சி யின் தலைவர் குடந்தை அரசன், திராவிடர் விடுதலைக் கழகத்தின் சென்னை மாவட்ட செயலாளர் உமாபதி, தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் சென்னை மாவட்ட தலைவர் குமரன், மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சியின் பொறுப்பாளர் வாலாசா வல்லவன், தமிழர் விடுதலைக் கழகத்தின் ஒருங்கிணைப்பாளர் சுந்தரமூர்த்தி, தமிழ் வழி கல்வி இயக்கத்தின் தோழர் சின்னப்ப தமிழர், மே பதினேழு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர்கள் திருமுருகன் காந்தி மற்றும் லெனாகுமார் ஆகியோர் பங்கேற்றனர்.

பேரணிக்குத் தமிழ்நாடு முழுதுமிருந்தும் தனிப் பேருந்துகளில் தோழர்கள் உணர் வாளர்கள் திரண்டு வருகிறார்கள். பேரணி மாநாட்டை விளக்கும் சுவரெழுத்துகள் எழுதப்பட்டு வருகின்றன. பெரியார் குறித்து பாடல்களை கவிஞர் வைரமுத்து உள்ளிட்ட கவிஞர்கள் இயற்றி அதற்கு இசையமைக்கப் பட்டு வருகின்றன. நடிகர் சிம்பு, பெரியார் குறித்து ‘குத்துப் பாட்டு’ ஒன்றை ஆல்பமாக நடனக் காட்சியுடன் ‘வலை ஒளி’யில் வெளி யிட்டுள்ளதை பல இலட்சம் இளைஞர்கள் பார்த்துள்ளனர். கவிஞர் மதன் கார்க்கி இப்பாடலை இயற்றியுள்ளார்.

பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு சார்பில் மாவட்டந்தோறும் கலந்துரை யாடல் நடத்தப்பட்டு திருச்சிப் பேரணிக்கு திரளுவதற்கான ஏற்பாடுகள் - பேரணி - விளம்பரங்களுக்கான திட்டமிடுதல்கள்



நடந்து வருகின்றன. சென்னையில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைமை நிலையத்தில் கடந்த டிசம்பர் 13ஆம் தேதி பிற்பகல் கலந்துரையாடல் கூட்டம் நடந்தது.

திருமுருகன் காந்தி, அரங்க. குணசேகரன், பொழிலன் உள்ளிட்ட அமைப்பாளர் களோடு கொளத்தூர் மணி, விடுதலை இராசேந்திரன், வாலாஜா வல்லவன், குடந்தை அரசன், செந்தில், டைசன் உள்ளிட்ட பலரும் பங்கேற்று, விரிவான ஆலோசனை நடத்தினர். மாநாட்டுத் தீர்மானங்கள் குறித்து விவாதிக்கப்பட்டன.

மாநாடு பேரணி நிகழ்வுகளை வீடியோவில் பதிவு செய்யும் பொறுப்புகளை திரைப்படத் துறையைச் சார்ந்த கலைஞர்கள் ஏற்றுள்ளனர்.

பொருள் வசதி ஏதுமில்லாத இலட்சிய நோக்கு கொண்ட இயக்கங்கள் நடத்தும் பேரணி - மாநாடு என்பதால் மக்களிடமிருந்து நன்கொடை திரட்டும் முயற்சிகளில் தோழர்கள் இறங்கியுள்ளனர். முகநூல்களில் பேரணி - மாநாட்டு செய்திகள் பெருமளவில் வலம் வருகின்றன. மாநாட்டுக்கான அழைப்பை பல்வேறு அமைப்புகளின் தலைவர்கள் குரல் ஒலி வழியாக பதிவு செய்துள்ளனர். மாநாட்டுக்கு அழைக்கும் பாடலோடு கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கழகத் தோழர்களை மாநாட்டுக்கு அழைக்கும் காட்சிகளும் இடம் பெற்றுள்ளன.

பொது வெளியில் ‘பேசும் பொருளாக’ கருஞ்சட்டைப் பேரணி - மாநாடு மாறியிருக் கிறது. இயக்கங்களுக்கு வெளியே உள்ள உணர்வாளர்களும் காவி பயங்கரவாதத்தைத் தமிழ்நாட்டுக்குள் அனுமதிக்கக் கூடாது என்ற உணர்வுடன் திருச்சிக்கு திரள திட்டமிட்டு வரும் செய்திகள் தமிழகம் முழுதுமிருந்தும் கிடைத்து வருகின்றன.

தமிழர்களின் முதன்மை அடையாளம் பெரியார். காவியை பெரியார் தந்த கருப்புச் சட்டையால் முறியடிப்போம்! என்ற முழக்கத்தோடு தமிழ்நாட்டில் தமிழின விடுதலைக்கும் ஜாதி ஒழிப்புக்கும் களத்தில் நிற்கும் அமைப்புகள் இயக்கங்கள் ‘பெரியார் உணர்வாளர்கள்’ என்ற ஒரே குடையின் கீழ் திருச்சியில் திரளப் போகிறார்கள்.

தமிழக வரலாற்றில் புதிய திருப்பத்தை உருவாக்கும் என்ற எதிர்பார்ப்பு ஓங்கி நிற்கிறது.

## ‘கருஞ்சட்டைப் பேரணி’க்கு திரளுவீர்!

அன்பார்ந்த தோழர்களுக்கு,

வணக்கம்.

தந்தை பெரியாரின் 45ஆம் நினைவுநாளை (24.12.1973) முன்னிட்டு வரும் டிசம்பர் 23, 2018 அன்று திருச்சியில் ‘காவி பயங்கரவாதத்தை’ வீழ்த்த இலட்சம் பேர் பங்கேற்கும் கருஞ் சட்டைப் பேரணி – மாநாடு நடைபெற உள்ளது.

பேரணியையும், மாநாட்டையும் வெற்றி பெற செய்ய வேண்டியது நம்முடைய கடமையும், உரிமையும் ஆகும்.

குறிப்பாக காவி பயங்கரவாதம் தமிழ் நாட்டையும், இந்திய துணை கண்டத்தையும் கார் இருளுக்குள் தள்ளிவிட்டது. வரலாற்றில் இதுவரை கண்டிராத அளவில் மனிதனை மனிதன் அடித்துக் கொல்லும் கொடூரமான கொடுங்கோல் ஆட்சியை மோடி தலைமையில் ஆர்.எஸ்.எஸ்.சும், பி.ஜே.பி.யும் நடத்திக் கொண்டு இருக்கின்றன.

இதற்கு மேலும் பொறுமையாகக் கடந்து செல்வது. தன்மானமுள்ள தமிழனுக்கு அவமானம். தமிழினத்தைப் பாதுகாக்க தமிழ் இளைஞர்கள் தோள் கொடுக்கவேண்டிய தருணம் இது.

மேலும் பெரியாரிய, மார்க்சிய, அம்பேத்கரிய, தமிழ்த் தேசிய, ஜனநாயக சிந்தனையாளர்கள் ஒரு குடையின் கீழ் திரள உள்ளனர்.

இங்கே எந்த வேறுபாடும் இல்லை. காவி பாசிசம் கட்டாயம் வீழ்த்தப்பட வேண்டும் என்கின்ற ஒற்றை இலக்கோடு களம் இறங்கி உள்ள பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப் பில், நாமும் இணைந்து பங்களிப்போம் வாருங்கள் தோழர்களே!

**– கொளத்தூர் மணி**
தலைவர்
திராவிடர் விடுதலைக் கழகம்

## கோவை கல்லூரி விழாவில் ‘பெண் ஏன் அடிமையானாள்?’ நூல் அறிமுகம்




கோவை அன்னூர் அருகே குப்பேபாளையம் கிராமத்தில் உள்ள ஜி.ஆர்.ஜி. தொழில்நுட்பக் கல்லூரியில் டிசம்பர் 14, 2018 அன்று முத்தமிழ் விழா நடந்தது. விழாவில் கோவை திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் நிர்மல், வெங்கட் ஆகியோர் பங்கேற்று, பெரியாரின் “பெண் ஏன் அடிமையானாள்?” நூல் குறித்து மாணவ மாணவிகளிடம் பேசினர். ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் உள்பட 230 பேர் நிகழ்வில் பங்கேற்றனர். கல்லூரி முதல்வர் சங்கர சுப்பிரமணியம் பங்கேற்றார். கவிஞர் வைகை சுரேஷ், இந்நிகழ்வை மிகுந்த ஆர்வத்தோடு ஏற்பாடு செய்தார்.

10 ரூபாய் விலையில் வெளியிடப்பட்டுள்ள நூலை தனது சொந்தப் பணத்தில் வாங்கி, மாணவிகளுக்கு வழங்கினார் வைகை சுரேஷ். கல்லூரியின் மனித வள மேம்பாட்டு அலுவலர் பாபு, மற்றும் நாட்டு நலப் பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் நிகழ்வுக்கு ஒத்துழைப்பு வழங்கினர். சில மாதங்களுக்கு முன்பு இங்கே கல்லூரி நிகழ்வில் பங்கேற்றுப் பேசிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பால பாரதி, பெரியாரின் இந்த நூல் குறித்துப் பேசியது மாணவிகளிடம் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

கோவை மாநகர மாவட்டச் செயலாளர் நிர்மல், இதுவரை ‘பெண் ஏன் அடிமையானாள்?’ நூலின் 6 ஆயிரம் பிரதிகளை மக்களிடம் கொண்டு போய் சேர்த்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மேதகு பிரபாகரன் பிறந்த நாளில் மாணவர்களுக்கு கல்வி உதவி




திராவிடர் விடுதலைக் கழகம் மற்றும் கற்க கல்வி அறக்கட்டளை சார்பில் தமிழீழத் தேசிய தலைவர் வே. பிரபாகரன் 64ஆவது பிறந்த நாள் விழா மற்றும் மாணவர்களுக்கு கல்வி உதவி வழங்கும் விழா சென்னை மேடவாக்கம் தமிழ் வழிப் பள்ளியில் கரு அண்ணாமலை தலைமையில் நடந்தது. பள்ளி மாணவர்களுக்கு கல்வி உதவி வழங்கி இனமான நடிகர் சத்யராஜ், திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைவர் கொளத்தூர் மணி, பொழிலன் (த.வி.க. தலைவர்) உரையாற்றினர்.

தலைவர் பிரபாகரன் பிறந்த நாள் விழாவில் மாணவர்கள் தமிழில் பிறந்த நாள் வாழ்த்து பாடல்கள் பாடி கேக் வெட்டி பிறந்த நாள் விழா கொண்டாடினர். உமாபதி, சுப்பிரமணி பொற்கோவன், பெரியார் மணிமொழியன் கண்ணன், சிலம்பம் சிவாஜி, கரிகாலன் சுரேஷ், மூவேந்தன், மதன்குமார் மற்றும் திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள், கற்க கற்க கல்வி அறக்கட்டளை தோழர்கள், பள்ளி மாணவர்கள் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.


## பெரியார்–அம்பேத்கர் நினைவு நாள் பொதுக் கூட்டம்

பெரியார் – அம்பேத்கர் நினைவு நாள் பொதுக் கூட்டம் 2018, டிசம்பர் 13ஆம் தேதி சென்னை சேத்துப்பட்டு பெரியார் திடலில் திராவிடர் விடுதலைக் கழக சார்பில் நடைபெற்றது. பா. ராஜன் தலைமை தாங்கினார்.

கோ. இளங்கோ (விடுதலை சிறுத்தைகள்), புவன் (மக்கள் அதிகாரம்) ஆகியோர் உரையாற்றியதைத் தொடர்ந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், முனைவர் சுந்தரவள்ளி உரையாற்றினர். வடசென்னை மாவட்டக் கழகத் தோழர் சா. ராஜீ நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். தொடக்கத்தில் சமர்கலைக் குழுவினரின் பறை இசை நிகழ்வு நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி குழுவினருக்கு நூல்களை வழங்கி பாராட்டினார்.

– புரட்சிப் பெரியார் முழக்கம் 20.12.2018

# போலி அறிவியலை தோலுரித்த நரேந்திர தபோல்கர்



நரேந்திர அச்சுத் தபோல்கர் (1945-2013) ஒரு பிரபலமான அறிவியல் ஆர்வலர், பகுத்தறிவுப் போராளி மற்றும் எழுத்தாளர். 2013 ஆகஸ்ட் 20 அன்று காலையில் நடை பயிற்சியில் இருந்தபோது சுட்டுக் கொல்லப்பட்டார். தபோல்கரைப் பற்றி உடனேயே அறிவியல் கதிரில் கட்டுரை வெளியிட்டிருக்கிறோம். மனிதத் தன்மையற்ற மூடநம்பிக்கைகளுக்கெதிராக அவரது இடைவிடாத பிரச்சாரத்தின் காரணமாகவும் மக்களிடையே அறிவியல் கண்ணோட்டத்தைப் பரப்பி வந்ததற்காகவும்தான் அவர் கொல்லப்பட்டார் என்பது வெளிப்படையான உண்மை.

தபோல்கர்தான் முதல் பலி என்பதுபின்னர் தெரிந்தது. 2015 பிப்ரவரி 20 அன்று கோவிந்த் பன்சாரே, அதே வருடம் ஆகஸ்ட் 30 அன்று எம்.எம்.கல்புர்கி, 2017 செப்டம்பர் 5 அன்று கெளரி லங்கேஷ்ஆகிய பகுத்தறிவாளர்களும் மதச்சார்பின்மைக்காகப் போராடியவர்களும் செயல்பாட்டாளர்களும் ஆன மேலும் மூவர் வரிசையாகக் கொல்லப்பட்டனர். ‘சனாதன் சன்ஸ்தா’ என்ற இந்துத்துவ பயங்கரவாத அமைப்புதான் இவர்களைக் கொலை செய்த குற்றத்தைச் செய்தது என்று கர்நாடக சிறப்புப் புலனாய்வு குழு தற்போது உறுதிப்படுத்தியுள்ளது. சமூகத்தில் தபோல்கரின் தலையீடுகள் காரணமாக மகாராஷ்டிராவில் மூடநம்பிக்கைகளுக்கு எதிரானதொரு சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதனையொட்டி கர்நாடகாவிலும் அப்படிப்பட்டதொரு சட்டம் நிறைவேறியது. லங்கேஷ் கொலையுண்ட இரண்டு மாதங்களுக்குப் பிறகு 2017 நவம்பரில் மாயமந்திரங்களை வைத்து மக்களை ஏமாற்றுவதைக் குற்றமாகக் கருதித் தண்டிக்கும் சட்டத்தை கர்நாடக அரசு மிகுந்த தயக்கத்திற்குப் பிறகு ஒருவழியாக நிறைவேற்றியது. மூடநம்பிக்கைகளுக்கெதிரான போராட்டம் என்பது தபோல்கரது வாழ்க்கையின் லட்சியப் பயணமாக இருந்தது. அந்தர் ஷ்தா நிர்மூலன் சமிதி (மூடநம்பிக்கை ஒழிப்புக் கழகம்) என்ற ஒரு அமைப்பை உருவாக்கியதோடு வட்ட அளவில் அதற்கு கிளை களையும் ஏற்படுத்தி மக்களிடையே விழிப்புணர்வைப் பெருக்க அவர் கடுமையான முயற்சிகளை மேற் கொண்டார். அவர் மராத்தியில் எழுதிய கட்டுரைகளை சுமன் ஓக் என்பவர் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்து The Case for Reason என்ற நூல் வெளியாகி யிருக்கிறது. புத்தகம் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட் டுள்ளது. மூடநம்பிக்கைகளுக்கெதிரான இயக்கத்தின் பல்வேறு கோட்பாடு சார்ந்த விளக்கங்களை முதல் பகுதி தருகிறது. அறிவியல் வரலாறு, தத்துவம் பற்றியும் மனித வாழ்க்கையின் பரிமாணங்களைப் புரிந்து கொள்ள அறிவியல் பார்வையுடன் அணுக வேண்டியதின் அவசியம் பற்றியும் ஒன்பது கட்டுரைகள் உள்ளன.

இரண்டாவது பகுதி ஏ.என்.எஸ். அமைப்பு பற்றியும் அதன் நடவடிக்கைகளையும் பற்றியது. மூடநம்பிக்கை சார்ந்த செயல்பாடுகளுக்கும் பகுத்தறிவுக்கு அப்பாற்பட்ட நம்பிக்கைகளுக்கும் எதிராக நடத்தப்பட்ட பல்வேறு பிரச்சாரங்களை இப்பகுதி விவரிக்கிறது. போலி சாமியார்களையும் கடவுளை நேரில்பார்த்துவிட்டு வந்தவர்கள் போல அவர்கள் விடும் சரடுகளையும் ஜோதிடம், வாஸ்து போன்ற மூடநம்பிக்கைகளையும் தபோல்கர் அம்பலப்படுத்துகிறார். முதல் பகுதியில் விளக்கப்பட்ட கோட்பாடுகளைகுறிப்பிட்ட சில நிகழ்வுகளுடன் பொருத்திய செயல்முறை விளக்கங்கள் இரண்டாவது பகுதியில் தரப்படுகின்றன. நூல் முழுவதுமே கொள்கையையும் நடைமுறையையும் நெடுக இணைக்கும் பாலம் ஓடிக் கொண்டே இருக்கிறது. இந்தியாவில் 8ஆவது நூற்றாண்டுக்குப் பிறகு விஞ்ஞான அறிவு ஏன் வளராமல் போனது என்ற கேள்வியை எழுப்பி அதற்கு ஐந்து காரணங்களை முன் வைக்கிறார் தபோல்கர். சடங்குகளுக்கும் கர்ம பலனுக்கும் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம், ஜாதிய அமைப்பு, முறையற்ற கல்வி, குடும்ப அமைப்பு, தனிப்பட்ட நபர்களைத் துதி பாடல் ஆகியவையே அவர் எடுத்துவைக்கும் காரணங்கள். இதே காலகட்டத்தை அறிவியல் வீழ்ச்சியடைந்து மனுவாதம் தலைதூக்கிய ‘எதிர்ப்புரட்சிக்கான’ காலம் என்று அம்பேத்கர் வர்ணிக்கிறார். ஒரு விதத்தில் அந்த மனப்பாங்குதான் இன்னமும் தொடர்கிறது. தொடர்வது மட்டுமல்ல, இன்றிருக்கும் அரசியல் சூழலில் மேலும் பலம் பெற்று வளர்ந்து கொண்டிருக்கிறது. பழமைவாதமும் புராண காலத்தை மீட்டெடுக்கும் முயற்சிகளும் வலுப்பெற்று வருகின்றன. சபரிமலையில் அனைத்து வயதுப் பெண்களும் வழிபாட்டில் கலந்து கொள்ளலாம் என்ற உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு எழுந்துள்ள எதிர்ப்பு ஒரு உதாரணம்தான்.

நவீன அறிவியலையும் அதன் எல்லைகளையும் பற்றி “அறிவியல் கண்ணோட்டம் என்பது இயற்கையை வென்றுவிட வேண்டும் என்ற நோக்கம் கொண்டதல்ல. இயற்கையையும் அதன் விதிகளையும் புரிந்துகொண்டு அவற்றை மனிதர்களுக்கு நன்மை தரும் விதத்தில் பயன்படுத்த வேண்டும் என்பதே அதன் நோக்கம்” என்கிறார் தபோல்கர். அறிவியலின் ‘மதிப்பு’ பற்றிக் கூறும்போது “அறிவியல் கண்ணோட்டம் நாம் மற்றவர்கள் எதை நமக்குச் செய்யக் கூடாது என்று விரும்புகிறோமோ அதை நாம் மற்றவர்களுக்குச் செய்யாமல் இருக்க வேண்டும் என்ற மனிதநீதி மனப்பான்மையை உருவாக்கும்” என்கிறார்.

“அறிதுயில் நிலை (hypnosis) என்பது ஒரு போலி அறிவியல்என்பதை நிலைநாட்ட, பாசிட்டிவ் எனெர்ஜியைத் தருகிறேன் என்ற பெயரில் அறிவியல் பிதற்றொலிகளை (jargons) சில போலி சாமியார்கள் எழுப்பி மக்களை மயக்குவது அறிவியலுக்கு எதிரானது. தற்போது ஆசிரியர்கள், கார்ப்பரேட் நிர்வாகிகள், நிர்வாகவியல் நிபுணர்கள் உள்ளிட்ட மக்கள் பிரிவினர் அறிவியல் பிதற்றொலிகளைப் பயன்படுத்தும் ஆன்மீக குருஎன்றும் மனிதவள மேம்பாட்டு வல்லுநர் என்றும் தன்னை அழைத்துக் கொள்பவர்களால் எளிதில் முட்டாளாக்கப் படுகிறார்கள். எளிமையான, விமர்சனப் பார்வையின்றி கேட்டதை அப்படியே நம்புவோரிடம் அறிவியலையும் ஆன்மீகத்தையும் கலந்து கொடுத்து ஏமாற்றுவது அவர்களுக்கு மிகவும் எளிதாகவே இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட இடத்தில் அமர்ந்து கொண்டு அருள்பாலிக்கும் சாமியார்களிடம் சென்று குடும்பப் பிரச்சனைகளுக்கு ஆலோசனைகளையும் பாவத்திற்கு பரிகாரங்களையும் கேட்போரை எதைச்சொல்லிக் காப்பாற்றுவது? இப்படிப்பட்ட ஏமாளித்தனத்திலிருந்து இளைய தலைமுறையிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய ஆசிரியர்களும் தப்புவதில்லை” என்று எழுதி நமக்கு விழிப்புணர்வூட்டுகிறார் தபோல்கர். மக்களுடைய வாழ்வில் விளையாடி கேட்டினை விளைவிக்கும் நோய்களிலிருந்து குணம் பெறு வதற்கான மருந்து தபோல்கரின் புத்தகங்களில் கிடைக்கிறது.

தபோல்கரின் எழுத்தில் ஒரு வடிவம் இருக்கிறது. முதலில் ஒரு மூடநம்பிக்கை தோன்றிய வரலாற்றை எழுதி, பின்னர் அது செயல்படும் விதத்தை அம்பலப் படுத்தி, இறுதியாக அது நம்நாட்டு நிலைமைகளில் எப்படி பொருந்திப் போகிறதுஎன்பதற்கான பகுத்தறிவு சார்ந்த விளக்கத்தை அவர்தருகிறார். மூடநம்பிக்கைகளை எதிர்ப்போரை இந்து மதத்திற்கு எதிரானவர்கள், தேசவிரோதிகள் எனமுத்திரை குத்தித் தாக்குவதில் வலதுசாரி இந்துத்துவாவாதிகள் பெருமை கொள்கிறார்கள். அறிவியல் கண்ணோட்டமும் பகுத்தறிவும் பரவுவது அவர்களுடைய மதவெறுப்பு அரசியலுக்கு எதிராக இருப்பதால் பகுத்தறிவாளர்கள் மீது இப்படி முத்திரை குத்துவது அவர்களுடைய தந்திரமாக இருக்கிறது. தாக்குதலுக்கு ஒரு காரணத்தைக் கற்பிக்க வேண்டுமல்லவா, அதைத்தான் அவர்கள் செய்கிறார்கள். ஆனால் தபோல்கரின் புலனாய்வு முஸ்லிம்களிடம் உள்ள ‘அற்புதங்களை’யும் அம்பலப்படுத்தத் தயங்கியதில்லை. காமர் அலி தர்வேஷ், சாகிப்ஜாதி நடத்தும் கூட்டங்கள் பற்றி அவர் எழுதியுள்ள கட்டுரைகள் இதைத் தெளிவாக்குகின்றன. அன்னை தெரசா மனிதர்களுக்கு செய்த சேவைகளைக் காட்டிலும் அவர்செய்ததாகச் சொல்லும் அற்புதச் செயல்கள் காரணமாக அவருக்கு புனிதர் பட்டம் கொடுக்கப் பட்டபோது தபோல்கர் அதை விமர்சித்து போப் அவர்களுக்கே கடிதம் எழுதினார். அதனால் அவர் ஏதோ இந்துமதத்திற்கு எதிரானவர் என சித்தரிப்பது உண்மைக்குப்புறம்பானது. அவர் மதங்களுக்கு அப்பாற்பட்டு சிந்தித்தவர் என்பதுதான் உண்மை. நீண்ட காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் பண்பாட்டு நடைமுறைகள் மனித வாழ்க்கையைக் கட்டமைத்திருப்பதற்கான காரணங்களை மேலும் ஆழமாக தபோல்கர் அலசாமல் விட்டது ஏன் என்ற கேள்வியும் புத்தகத்தைப் படிப்போரிடம் எழுகிறது. நம்பிக்கை மற்றும் பகுத்தறிவின்மையின் பல்வேறு வடிவங்கள் பண்பாட்டு நடைமுறைகளிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாதவை.

அதே சமயம் வரலாற்றிலிருந்தும் தத்துவத்திலிருந்தும் ஏராளமான தரவுகளை இந்த புத்தகம் எடுத்துக் கையாண்டிருக்கிறது. படிப்பதற்கு எளிமையாக இருப்பது அதன் பெரிய பலம். தற்போதிருப்பதை விட சிறந்த மனித சமூகத்தைக் காண விழைவோர் அறிவுஜீவிகளானாலும் சரி, சாமானிய மக்களானாலும் சரி அவர்கள் இரு பிரிவினருக்குமே இந்த நூல்பயனுள்ளது. மக்கள் விழிப்புணர்வு பெறவும் மதச் சார்பின்மைத் தத்துவம் நாட்டில் வேரூன்றவும் பாடுபட்டு தங்கள் இன்னுயிரை ஈந்த தபோல்கர், கோவிந்த் பன்சாரே, எம்.எம்.கல்புர்கி, கெளரி லங்கேஷ் போன்ற மனிதநேய மேதைகளை என்றென்றும்நினைவில் வைத்துச் செயல்படுவோம்.

(உதவிய கட்டுரை : 2018 நவம்பர் 11 அன்று ஆங்கில இந்து நாளிதழில் வி.எஸ். ஸ்ரீதரா எழுதியது)

நன்றி: ‘தீக்கதிர்’

# பெரியார் இயக்கம் சந்தித்த அடக்குமுறைகள் (2)

# அரசியல் சட்ட எரிப்புக் கிளர்ச்சி

*22.9.2018 அன்று பெரம்பூரில் வடசென்னை மாவட்டக் கழகம் நடத்திய கருத்தரங்கில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் 'பெரியார் இயக்கம் சந்தித்த அடக்குமுறைகள்' என்ற தலைப்பில் நிகழ்த்திய உரையிலிருந்து.*

ஒரு நாட்டின் அரசியல் சட்டப் பிரிவுகளையே 10,000 பேர் தீயிட்டுக் கொளுத்திய போராட்ட வரலாறு - பெரியார் இயக்கத்துக்கு மட்டுமே உண்டு. 1957 நவம்பர் 26இல் அரசியல் சட்டத்தில் ஜாதி இழிவு ஒழிப்புக்குத் தடையாக உள்ள உட்பிரிவுகளான 13(2), 25(1), 26(1), 26(2), 368 பிரிவுகளை தீயிட்டு எரிக்கும் போராட்டத்தை தஞ்சையில் திராவிடர் கழக சிறப்பு மாநாட்டை 3.11.1957 அன்று கூட்டி பெரியார் அறிவித்தார்.

சரியாக 24 நாட்கள் இடைவெளியில் சட்ட எரிப்புப் போராட்டத்தை பெரியார் அறிவித்தார். பெரியார் தஞ்சை மாநாட்டுச் சிறப்பை தனது உரையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

**"எனது 40 ஆண்டுகால வாழ்க்கையில் எத்தனையோ மாநாடுகள் நடந்திருக்கின்றன. தலைமை வகித்திருக்கிறேன்; சுயமரியாதை இயக்க கால முதல் சிறப்பாக முதல் மாநாடு செங்கல்பட்டில் நடந்தது. அதுதான் 'ரிக்கார்டு'. மாநாடு ஜமீன்தாரர்கள் 60-65 பேர் வந்திருந்தார்கள். எல்லா சட்டசபை மெம்பர்களும் எல்லா மந்திரிகளும் வந்திருந்தார்கள். நல்ல கூட்டம் இருந்தாலும் இதில் அரை பங்குக்குக் குறைவான அளவுதான் இருக்கும். இதற்குப் பிறகு பல மாநாடுகள் நடந்திருந்தாலும் இந்த மாநாட்டைத் தொடும்படியான அளவுக்குக்கூட நடந்தது இல்லை"** - என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசுகையில்,

**"திராவிடர் கழகத் தனி மாநாடு என்று சொல்லப்பட்டாலும் உங்கள் தலைவனுக்கு, முக்கிய தொண்டர்களுக்கு ஜெயிலுக்கு செல்ல வழியனுப்பு மாநாடுதான் இந்த மாநாடு. அரசியல் சுற்றுச் சார்பு சூழல் அப்படித்தான் உள்ளது. இந்த மாநாட்டின் பலன், வெற்றி அதுவாகத்தான் இருக்கும். கூடிய விரைவில் அரசாங்க விருந்து இருக்கிறது. அது லேசில் கிடைக்கக் கூடியது அல்ல. முன்பெல்லாம் சாதாரணம். ஆனால் இப்போது அது லேசில் கிடைப்பதாக இல்லை"** - என்று பெரியார் குறிப்பிடுகிறார்.

"இராமன் எரிப்பு, பிள்ளையார் உடைப்புப் போராட்டங்களில் கடும் அடக்கு முறைகள் இல்லாமல் போய்விட்டது" என்று அதே உரையில் வருத்தப்படுகிறார்.

"ஜாதி இழிவு இன்னும் தொடர்வதை எப்படித் தட்டிக் கேட்காமல் இருக்க முடியும்?" என்று பெரியார் மாபெரும் கூட்டத்தை நோக்கி கேள்வி எழுப்பினார்.


"ஒரு மனிதன் நான் ஏன் பிறவியில் தாழ்ந்தவன் என்று கேட்கக் கூடாது; கேட்க உரிமை இல்லை என்றால் இது என்ன சுயராஜ்யம்? நீங்கள் சிந்திக்க வேண்டும். எனது 40 ஆண்டு பொது வாழ்க்கையில் ஒருவனைக்கூட உதைத்ததில்லை; குத்தியதில்லை. ஒருவனுக்குக்கூட ஒரு சிறு காயம் கூட பட்டதில்லை. **கலவரமில்லாமல், நாசமில்லாமல் எவ்வளவு தூரம் நடக்கலாமோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது என்று விரும்பி, அதன்படி நடப்பவன்.** வெட்டாமல் குத்தாமல் காரியம் சாதிக்க முடியாது என்ற நிலைமை வருமானால், சும்மா இருந்தால் நான் மடையன் தானே?

ஒரு ஆயிரம் பார்ப்பானையாவது கொன்று, ஒரு இரண்டாயிரம் வீடுகளையாவது கொளுத்தி, ஒரு நூறு பார்ப்பனர்களையாவது அதில் தூக்கிப் போட்டால் ஒழிய சாதி போகாது என்ற நிலைமை வந்தால் என்ன செய்வீர்கள்? (கொல்லுவோம்! கொளுத்துவோம்! என்று இலட்சக்கணக் கானவர் முழக்கமிட்டனர்) எவனாக இருந்தாலும் இந்த முடிவுக்குத் தானே வர வேண்டும்? அட பைத்தியக்காரா! நான் (மட்டும்) தானா சொல்கிறேன்? (நாங்கள் செய்வோம் என்று முழக்கம்) இன்றே செய்ய வேண்டும் என்று சொல்லவில்லை. நாளைக்கே செய்ய வேண்டும் என்று சொல்லவில்லை. அதைத் தவிர வேறு வழி இல்லை என்றால் என்ன செய்வது? நான் ஏன் சூத்திரன்? நான் ஏன் வைப்பாட்டி மகன்? நான் ஏன் கீழ்சாதி? இதற்குப் பரிகாரம் வேண்டும் என்றால் குத்துகிறேன் என்றான். வெட்டுகிறேன் என்றான் என்றால், குத்தாமல் வெட்டாமல் இருக்கிறதுதான் தப்பு என்று தானே எண்ண வேண்டியுள்ளது?" என்று பெரியார் கேட்டார்.

வன்முறை ஒரு துளியாவது நடந்துவிடக் கூடாது என்பதில் கவனமாக இருந்த பெரியார், 'தமிழின இழிவை' இனியும் சகிக்க முடியாது என்பதை எதிரிகளுக்கு எச்சரிக்கவே அச்சுறுத்தும் ஆயுதத்தைப் பெரியார் பயன்படுத்தினார். தன்னை எவ்வளவு வருத்திக் கொள்ள முடியுமோ அவ்வளவு வருத்திக் கொண்டு எதிரிகளை எச்சரித்து மிரட்டி இன விடுதலையை இழிவு ஒழிப்புப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றதே பெரியாரின் தனித்துவமான அணுகுமுறையாக இருந்திருக்கிறது.

அரசியல் சட்டப் பிரிவுகளை ஒழிக்கும் போராட்டத்தை நோக்கி பெரியாரை நிர்ப்பந்தித்த நிகழ்வு மிகவும் முக்கியமானது. பெரியார் தலித் மக்களுக்காக என்ன செய்தார் என்ற ஒரு கேள்வி சில முகாம்களிலிருந்து அவ்வப்போது எழுப்பப்பட்டு வருகிறது. வரலாறு தெரியாமலோ அல்லது தெரிந்தும் பெரியாரை கொச்சைப் படுத்தும் நோக்கத்திலோ பேசுகிறவர்கள், பெரியாரின் சட்ட எரிப்புக் கிளர்ச்சிக்கு அவரை உந்தியதே முதுகுளத்தூரில் இமானுவேல் படுகொலையும் அதையொட்டி தேவர் ஜாதியினர் நடத்திய ஜாதிக் கலவரமும் தான் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். பெரியார் தஞ்சை மாநாட்டிலேயே இதை சுட்டிக் காட்டுகிறார்:

"முதுகுளத்தூரில் நூறு பேரைக் கொன்று இரண்டாயிரம் வீட்டைக் கொளுத்தினார்களே! என்ன செய்தாய்? என்ன செய்ய முடிந்தது? யாரோ நாலு பேர் மீது வழக்குப் போட்டால் தீர்ந்து விடுமா? எரிந்த வீடும் செத்தவனும் வந்து விடுவானா?" என்று பெரியார் முதுகுளத்தூரில் ஜாதி வன்முறையை சுட்டிக் காட்டுகிறார்.



**'தஞ்சை மாநாட்டுக்கு இணையாக வேறு எந்த மாநாடும் இல்லை**

பெரியார் சட்ட எரிப்புப் போராட்ட அறிவிப்புக்குப் பிறகுதான் அடுத்த சில நாட்களிலேயே அரசியல் சட்டம் கொளுத்துவதும், காந்தி படம் போன்ற தேசத் தலைவர்களின் படத்தைக் கொளுத்துவதும் தேசிய அவமதிப்பு என்றும் அப்படிச் செய்கிறவர்களுக்கு மூன்று ஆண்டு சிறை என்றும், தமிழ்நாடு அரசு அவசர சட்டம் ஒன்றைக் கொண்டு வருகிறது. அப்போது 'விடுதலை' - இந்த சட்டத்தை எதிர்த்து என்ன எழுதியது? என்பதையும் பார்க்க வேண்டும்.

"முதுகுளத்தூர் கலவரத்தில் நூற்றுக்கணக்கான ஆதி திராவிடர்கள் உயிர்கள் பலியாயின. அவைகளைப் பற்றி ஒரு சொட்டுக் கண்ணீர்கூட சிந்தாத ஆரிய ஏடுகள் அனைத்தும், இன்று ஆரிய உயிருக்கு ஆபத்துக் கூட ஏற்படாத நிலைக்காக இந்த நாட்டையே கிடுகிடுக்க வைத்துவிட்டன. உயிர்களிலே எவ்வளவு வேற்றுமை பார்த்தீர்களா? ஆதித் திராவிடர்கள் எத்தனை ஆயிரம் போனாலும் சரி; அக்கிரகாரத்தின் உடம்பில் ஒரு துரும்பு விழக்கூட இடமிருக்கக் கூடாது. இதுதான் இன்று ஆரிய ஆதிக்கத்தின் விளைவு. அன்று நடைமுறையிலிருந்த மனுதர்மம் இன்றும் இதோ சர்வாதிகரம் செலுத்திக் கொண்டிருக்கிறது" என்று முதுகுளத்தூர் பிரச்சினையை முன் வைத்தே 'விடுதலை' ஏடு (5.11.1957) எழுதியது.

சட்டத்தை எரித்தால் 3 ஆண்டு சிறை என்ற சட்டம் வந்தவுடன், பெரியார் 'விடுதலை'யில் வெளியிட்ட அறிக்கை தான் மிகவும் முக்கியமானது. இந்த அறிக்கைதான் பல்லாயிரக்கணக்கில் சட்டத்தை எரித்து சிறைக்குச் செல்ல தோழர்களின் உறுதிப்பாட்டைத் தூண்டிய அறிக்கை என்றும் கூறலாம்.

**"நான்
மூன்று ஆண்டுகளோ,
பத்து ஆண்டுகளோ,
நாடு கடத்தலுக்கோ,
தூக்குக்கோ,**

**மற்றும் பிரிட்டிஷ்காரன், காங்கிரஸ் கிளர்ச்சியின் மீது கையாண்ட எந்தவிதமான கொடிய தீவிரமான அடக்குமுறைகளை நம் மீதும், கழகத்தின் மீதும், பிரயோகித்தாலும்கூட அவைகளுக்குப் பயப்பட்டு என் இலட்சியத்தையோ திட்டத்தையோ மாற்றிக் கொள்ளப் போவது இல்லை.**

**கழகத் தோழர்களே! தீவிர இலட்சியவாதிகளே!**

**நீங்கள் மூன்று ஆண்டு தண்டனைக்கு பயந்து விட வேண்டியதில்லை; பயந்து விட மாட்டீர்கள்.**

**சட்டத்தைப் பார்த்து பயந்து விட்டதாகப் பேர் வாங்காதீர்கள்.**

**ஆகவே, இஷ்டப்பட்டவர்கள் தஞ்சை மாநாட்டுத் தீர்மானத்துக்குப் பெயர் கொடுங்கள்.**

- ஈ.வெ.ரா. ('விடுதலை' 11.11.1957)

அரசியல் சட்டப் பிரிவுகளை எரித்து கைது செய்யப்பட்ட தோழர்கள் நீதிமன்றத்தில் தந்த வாக்குமூலம் என்ன? ஒவ்வொரு தோழரும் தர வேண்டிய வாக்குமூலத்தை பெரியார் - 'விடுதலை'யில் வெளியிட்டார்.

**"நான் ஜாதி ஒழிப்புக் கிளர்ச்சிக்காரன். இந்திய அரசமைப்புச் சட்டத்தில் ஜாதிக்கும், அதை உண்டாக்கிய மதத்துக்கும் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அரசமைப்புச் சட்டம் தமிழர் நலனுக்காக வகுக்கப்படவுமில்லை; அச்சட்டத்தைத் திருத்தக்கூடிய வசதி தமிழர்களுக்கு இல்லை.**

**ஆதலால், என் எதிர்ப்பைக் காட்டிக் கொள்ளும் அறிகுறியாக இச்சட்டத்தைக் கொளுத்தினேன். இப்படிக் கொளுத்துவதற்கு எனக்கு உரிமையுண்டு. இதனால் எந்த உயிருக்கும் எந்த பொருளுக்கும் சேதமில்லை. ஆதலால் நான் குற்றவாளியல்ல. இந்த நீதிமன்ற நடவடிக்கையில் நான் கலந்து கொள்ள விரும்பவில்லை. நான் எதிர் வழக்காட விரும்பவில்லை. நான் குற்றவாளி என்று கருதப்பட்டால் அதற்குரிய தண்டனையை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளத் தயாராயிருக்கிறேன்."**

இதைத்தான் ஒவ்வொரு கருஞ்சட்டைத் தோழரும் நீதிமன்றத்தில் கூறி சிறை சென்றனர். ஒருவர்கூட பிணை கேட்கவில்லை. எவ்வளவோ அழுத்தங்கள் தந்தும் குடும்பத்து உறுப்பினர்கள் மரணித்த நிலையிலும் சிறையிலிருந்து வெளியே வர விரும்பவில்லை.

ஜாதி ஒழிப்புப் போராட்ட வரலாற்றில் பெரியார் தொண்டர்களின் தியாகத் தழும்புகள் ஏராளம் உண்டு. அந்த வரலாற்றுக்குள் போகாமல் அடக்குமுறையை பெரியார் எதிர்கொண்ட முறை பற்றி மட்டுமே நான் பேசுகிறேன்.

அடக்குமுறை சட்டத்தைக் கொண்டு வந்தபோது காமராசர் தான் முதல்வர். காமராசர் ஆட்சியை பார்ப்பனியத்துக்கு எதிரான பச்சைத் தமிழர் ஆட்சி என்று பெரியார் தீவிரமாக ஆதரித்துக் கொண்டிருந்த நேரம். பெரியார் இந்த அடக்குமுறைகளுக்காக தனது எதிர்ப்பை காமராசரை நோக்கியோ அவரது ஆட்சியை நோக்கியோ திருப்பிவிட விரும்பவில்லை. அது கூடாது என்பதில் பெரியார் உறுதி காட்டினார். முதன்மையான எதிரியான பார்ப்பனர்கள் நோக்கியே பெரியார் போராட்டத்தை திசை திருப்பாமல் நகர்த்தினார்.

பெரியாரின் இந்த நுட்பமான அணுகுமுறையை பெரியாரில்வாதிகளான நாம் பாடமாகக் கற்க வேண்டும். முதன்மையான எதிரியை நோக்கி நடத்தும் களப் போராட்டத்தில் ஒரு பிரச்சினையை எந்தப் பார்வையில் அணுக வேண்டும் என்பதற்கு பெரியார் வெளிச்சம் காட்டுகிறார்.

(4 ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY  TAMIL WEEKLY  REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM  REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

### முன்னாள் நீதிபதி சந்துரு சாடுகிறார்

# ஆகமங்களை அறியாமலேயே தீர்ப்பு வழங்கும் நீதிபதிகள்

நீதிபதிகள் ஆகமங்களையே அறியாமல் தீர்ப்பு சொல்லுகின்றனர் என்று சென்னை உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி கே.சந்துரு கூறினார். வழக்கறிஞர் சிகரம் ச. செந்தில் நாதனின் படைப்புலகம் குறித்த ஆய்வரங்கு டிச.16 அன்று சென்னையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் நிறைவாக சிறப்புரை யாற்றிய அவர்,

“நீதிபதிகளே ஆகமம் என்றால் என்னவென்று தெரியாமல் தீர்ப்பு வழங்குகின்றனர். காஞ்சி வைணவக் கோவிலில் தமிழில் பாசுரங்களை பாடக் கூடாது என்று ஒரு வழக்கு. அதன்மீது தீர்ப்பளித்த உயர்நீதிமன்ற நீதிபதி, ஆகம விதிப்படி தமிழில் பாட தடைவிதிப்பதாக தீர்ப்பளித்தார். அந்த நீதிபதியைத் தொடர்பு கொண்டு எந்த ஆகமத்தை படித்துப்பார்த்து தீர்ப்பு வழங்கினீர்கள்? ஏற்கெனவே ஆகமம் குறித்து நான் வழங்கிய தீர்ப்பைக் கூட படிக்கவில்லையா? என்று கேட்டேன். அவரிடம் பதில் இல்லை.

ஆகமங்கள், கோவில்கள் குறித்து செந்தில்நாதன் புத்தகம் எழுதியுள்ளார். அவற்றை முதலில் நீதிபதிகளுக்கு கொண்டு சேர்க்க வேண்டும். ஒரு வழக்கு வருகிறதென்றால், நீதிபதிகள், அதை நன்கு படித்துப் பார்த்துவிட்டு, விசாரிக்க தமக்கு தகுதி இருக்கிறதா? என்பதை சுயபரி சோதனை செய்து கொண்டு விசாரிக்க வேண்டும் அல்லது வழக்கு தொடர்பான முழுவிவரங்களைத் தேடித்தெரிந்து விசாரிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார். தமிழ் இலக்கியத்தின் ஒரு பகுதிதான் பக்தி இலக்கியங்கள். ஆகமத்தில் மொழி பற்றி கூறப்படவில்லை. சில அமைப்புகள் மக்களின் நம்பிக்கைக்கு எதிராக நீதிமன்றம் தீர்ப்பு வழங்க முடியாது என்கிறார்கள். எல்லா விதமான பிரச்சனைகளுக்கும் தீர்வு வழங்கத்தான் நீதிமன்றங்கள் உள்ளன.

சமூகத்தின் பழக்கவழக்கங்கள், சமூக நடைமுறைகள் மீது கருத்து கூற வேண்டிய கடமை நீதிமன்றத்திற்கு உள்ளது. நீதிபதிகள் அனுபவங்களின் அடிப்படையில் தீர்ப்பு கொடுக்கின்றனர். இன்றைய தீர்ப்பு நாளைக்கு இருக்குமா? என்று தெரியவில்லை. மனம் புண்படும் வருத்தப்படும் என்று கருதாமல் கருத்தை ஆணித்தரமாக சொல்ல வேண்டும் என்றார்” முன்னாள் நீதிபதி சந்துரு.

### கவுசல்யா மறுமணம்

# ஆணவப் படுகொலைக்கு எதிராக இணைந்த கைகள்





திருப்பூர் மாவட்டம் உடுமலைப் பேட்டை அருகே உள்ள குமரலிங்கம் எனும் கிராமத்தைச் சேர்ந்த சங்கரும் பழநியைச் சேர்ந்த கவுசல்யாவும் பொள்ளாச்சியில் உள்ள பொறியியல் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த போது 2015இல் சாதி மறுப்பு திருமணம் செய்து கொண்டனர். சங்கர் தலித் சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதால் ஜாதி வெறியுடன் கவுசல்யா வின் பெற்றோர் இத்திருமணத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். 2016 மார்ச் மாதம் உடுமலைப்பேட்டையில் பட்டப் பகலில் சங்கர் படுகொலை செய்யப்பட்டார். கொலைக்கு திட்டமிட்ட கவுசல்யாவின் பெற்றோர்கள் தண்டிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இந்த நிலையில் கவுசல்யா மறுமணம் புரிய துணிவுடன் முடிவெடுத்தார்.

கோவையில் தந்தை பெரியார் திராவிடர் கழக அலுவலகத்தில் டிசம்பர் 9ஆம் தேதி மறுமணம் நடந்தது. பறை இசை முழங்க நடந்த அந்தத் திருமணத்தில் சங்கரின் தந்தை வேலுச்சாமியும் சங்கரின் சகோதரர்களும் கலந்து கொண்டு இணையரை வாழ்த்தினர். இனி, “ஜாதி ஒழிப்புக் களத்தில் துணைவருடன் இணைந்து செயல்படுவேன். ஆணவப் படுகொலைக்கு எதிராகச் சட்டம் இயற்றப் போராடுவேன்” என்று உறுதியுடன் கவுசல்யா கூறினார்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, த.பெ.தி.க. பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் முன்னிலை வகித்தனர். கருப்புச் சட்டை அணிந்த இணையர் பறை இசை முழக்கி பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தனர்.

## அய்ராவதம் மகாதேவன் முடிவெய்தினார்



அய்.ஏ.எஸ். அதிகாரியாக பணியாற்றி விருப்ப ஓய்வு பெற்று ‘தினமணி’ நாளேட்டில் ஆசிரியராக நான்காண்டு காலம் பணியாற்றி, பிறகு எழுத்தியல் குறித்த ஆய்வில் பெரும் சாதனை முத்திரைகளைப் பதித்த அய்ராவதம் மகாதேவன் முடிவெய்தினார்.

பார்ப்பனராகப் பிறந்தாலும் அவர் சார்பு நிலையற்ற ஆய்வாளராக வாழ்ந்து காட்டிய அபூர்வ மனிதராகவே வாழ்ந்தார்.

சிந்து சமவெளி நாகரிக எழுத்துக்கள் திராவிட நாகரிகத்துக்கு உரியவை என்பதை ஆதாரங்களுடன் நிரூபித்தார். தமிழ் பிராமி எழுத்துகள் தான் மிகவும் பழமையானது என்பதை நிறுவியவர். சிந்து வெளி நாகரிகம், ஆரிய நாகரிகமே என்று வரலாற்றுத் திரிபு செய்த பார்ப்பனியத்துக்கு மறுப்பாக அவரது ஆய்வு அமைந்தது. இந்திய வரலாற்று ஆய்வு மய்யத்தின் நிதி உதவியோடு அவர் நடத்திய ஆய்வுகளை இந்திய தொல்லியல் துறை 1977இல் நூலாக வெளியிட்டது. மண்டல் பரிந்துரையில் பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவீத இடஒதுக்கீடு ஆணை வந்தபோது பார்ப்பனர்கள் கடுமையாக எதிர்த்த நிலையில் அதை ஆதரித்தவர் அய்ராவதம் மகாதேவன்.

தனது 88ஆவது வயதில் கடந்த நவம்பர் 26 அன்று முடிவெய்தினார். திராவிடர் விடுதலைக் கழகம் அவரது ஆய்வுத் தொண்டைப் பாராட்டி ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

அது குறித்து பெரியார் என்ன எழுதினார்?

“அரசமைப்புச் சட்டம் முதலியன கொளுத்துவது பற்றி சென்னை அரசாங்கம் செய்திருக்கும் புதிய சட்டம் விஷயமாய் பொது மக்கள் சிறிதும் கவலைப்பட வேண்டியதில்லை. மற்றும் என் மீது கடுந்தண்டனைக்கு ஏற்ற வழக்கு தொடுத்திருப்பது பற்றியும் பொது மக்கள் கவலைப்பட வேண்டியதில்லை.

இவைகள் எல்லாம் பார்ப்பனர்களால் எய்யப்படும் அம்புகளே தவிர, சென்னை அரசாங்க மந்திரிகளாகிய அம்புகளுக்குச் சிறிதும் சம்பந்தப்படாதவைகளேயாகும். அன்றியும் பார்ப்பனர் வெளியேற்றப்பட வேண்டும் என்பதற்கும், வடநாட்டான் ஆதிக்க ஆட்சியிலிருந்து (இந்திய யூனியனிலிருந்து) பிரிந்து முழு சுதந்திரத் தமிழ்நாடு ஆட்சி பெற்றாக வேண்டும் என்பதற்கும் இவை (பார்ப்பனர் நடத்தைகளும் அவர்களுக்கு வடநாட்டான் ஆதரவுகளும்) சரியான காரணங்களாகும். அதற்காகத் துரிதமாகவும், தீவிரமாகவும் கிளர்ச்சி செய்யவும், இது வலிமை மிக்க தூண்டுதலாகும். சென்னை அரசாங்க மந்திரிகள் நம் மக்களின் கல்வி சம்பந்தமாக எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சிகள் நாம் பாராட்டத்தக்கதும், நன்றி செலுத்தத் தக்கவையும் ஆகும். இம்முயற்சி பார்ப்பனர்களுக்குப் பெரும் கேடானதால் இந்த பார்ப்பனர்கள் என் மீது கொண்டுள்ள ஆத்திரத்தையும், பழிவாங்கும் எண்ணத்தையும்விட, இன்றைய மந்திரி சபை மீது கொண்டுள்ள ஆத்திரமும், பழி வாங்கும் எண்ணமுந்தான் பேயாட்டமாக ஆடி இப்படிப்பட்ட தொல்லைகளை உண்டாக்கிக் கொண்டிருக்கின்றன.

ஆதலால், பொது மக்கள் இச்சம்பவங்களுக்காக இன்றைய மந்திரி சபையிடமோ, குறிப்பாக திரு.காமராசரிடமோ எவ்விதமான அதிருப்தியும் காட்டவோ கொள்ளவோ வேண்டியதில்லை. (‘விடுதலை’ 16.11.1957) – என்று எழுதினார்.

அடக்குமுறைகளை தனது போராட்டத்துக்கான உந்து சக்தியாக்கிக் கொண்டு ஆர்வத்தோடு அவற்றை வரவேற்றார் பெரியார். வரலாற்றில் பார்ப்பன எதிர்ப்புக் களத்தில் பெரியார் முன்னேறிச் செல்ல முயன்றதற்கு பெரியாரின் இந்த நுட்பமான அணுகுமுறைகளே மிக முக்கிய காரணிகளாக இருந்திருக்கின்றன.

(தொடரும்)


## தற்போது விற்பனையில்

**‘நிமிர்வோம்’ – நவம்பர் 2018 இதழ்**




- நடுவண் ஆட்சியின் துரோகங்கள் – தலையங்கம்
- ஜாதி ஒழிப்புப் போராளியின் நினைவலைகள்
- “இந்து இராஷ்டிரம்” அமைக்க படுகொலைகளை நடத்தும் அமைப்பு – அதிர்ச்சித் தகவல்கள்
- ஆரியர்களே பூர்வீகக் குடிகள் என்ற வரலாற்றுப் புரட்டுகள் தகர்கின்றன
- சீடர்களுடன் புத்தர் நடத்திய அறிவார்ந்த விவாதங்கள்
- பட்டியல் இனப்பிரிவு இட ஒதுக்கீட்டில் கிரிமிலேயர்

மற்றும் பெரியார் சிந்தனைகளுடன்...

தனி இதழ் விலை : ரூ.20

தொடர்புக்கு: நிர்வாகி, 95, டாக்டர் நடேசன் சாலை, அம்பேத்கர் பாலம், மயிலாப்பூர், சென்னை-600 004.

தொலைபேசி எண்: 044 24980745/7299230363

www.dvkperiyar.com/nimirvomdvk@gmail.com


Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP  Posted: 21st December 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN